மருதையாற்றின் குறுக்கே அணை.

* 549 வினா— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் மருதையாற்றின் குறுக்கே அணைகட்டி நீர்ப்பாசனத்துக்கு தண்ணீர் விடும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் அவசியத்தைக் கருதி மதிப்பீடு செய்யப்பட்டு இந்த ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1975-ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அளித்த உறுதிப்படி லிவ்விபிருங்கியம் என்ற கிராமத்தில் 134 லட்சம் ரூபாய் செலவில் ஒரு நடுத்தர திட்டத்திற்கான செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பகுதியிலுள்ள மருதையாற்றின் நீர் உப்புத் தன்மை உள்ளதாக இருப்பதால் இதுபற்றி ஆராய ஒரு உயர்மட்டக் குழு அமைக்க வேண்டியுள்ளது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : அந்த உதவிப் பொறியாளர் மீது புகார் வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பிள்ளையே பிறக்கவில்லை, அதற்குள் பெயர் வைப்பதைப் போல் உள்ளது. புகார் வந்திருக்கிறதா என்றால், திட்டமே இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.